அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 454/2008

C/W OS.No.506/2009, OS.475/2012, OS.538/2009, OS.94/2010

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி.V.நாகேஸ்வரி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 28.02.2025 |
| பெயர் மனோகரன் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>குறுக்கு விசாரணை</u>:–

12. தாவா சொத்து 1ம் பிரதிவாதியான எனதுதாயருக்கு சொந்தமானதா என்றால் இல்லை அவர் அதில்அடிமனைவாடகை தாரர். தனக்குசொந்த இல்லாத சொத்திற்கு வாடகைதாரராக இருக்கும் 1ம் பிரதிவாதி பவர் பத்திரம் எழுதிகொடுப்பதும் எழுதிவாங்குவதும் தவறு என்றால் சரியல்ல. பவர் ஆப் அட்டானி சட்டத்தின் படி தனக்கு சொந்தமான சொத்திற்கு மட்டுமே வில்லங்கம் எற்படுத்த பவர் எழுதிகொடுக்க முடியும், வாடகை தாரராக இருக்கும் பட்சத்தில் அதுபோன்ற பவர் எழுதிகொடுக்க எந்த

அதிகாரமும் கிடையாது என்றால் கட்டிடம் மற்றும் குத்தகையை மாற்றிகொடுக்க முடியும்.

13. 1ம் பிரதிவாதி எனக்கு எதற்காக பவர் கொடுத்தார் என்றாலும் கட்டிடத்திற்கு கொடுத்தாரா , அடிமனைக்கு கொடுத்தாரா அல்லது குத்தகைக்கு கொடுத்தாரா என்றால் அனைத்திற்கும் கொடுத்தார். நான் முதலில் கட்டிடத்திற்குமட்டும் பவர் கொடுக்கமுடியும் கூறுவிட்டு தற்போது அடிமனைக்கும் சேர்த்து எனக்கு பவர் கொடுக்கலாம் என்று மாற்றி கூறுவதால் எனது வழக்கு பொய்யான முகாந்தரங்களின் அடிப்படையில் தொடரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14. பிராதின் வழக்கு மூலத்தில் எனது பவர் ரத்தை செல்லாது என்று கேட்டுள்ள பரிகாரத்திற்கான வழக்கு மூலம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சியிடம் அவர் தாக்கல் செய்த தாவா காட்டப்பட்டது. அவர் பிராதின் 16வது பத்தியை படித்துபார்த்தார். வழக்கு மூலம் என்னவென்று தெரியுமா என்றால் தெரியாது ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு நடத்துகிறேன். சாட்சி மேற்படி 16வது பத்தியை படித்துவிட்டு அதுபற்றிய எந்த வாசகமும் இல்லை என்று ஒப்புக்கொண்டார். வழக்கு மூலத்தில் கூறவேண்டிய பரிகாரம் சம்மந்தமான முக்கிய சங்கதிகளை கூற தவறியதால் இந்த வழக்கு நிலைக்க தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

15. பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டதின் அடிப்படையில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் போலியான சங்கதிகளின் அடிப்படையில் ஒரு உத்தரவு பெற்று ஆவணங்களை எனது பெயரில் திருத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் எதிரான ஒருதலைபட்ச உத்தரவு நீக்கரவு செய்யப்பட்ட விவரமும்

அவர்கள் மீண்டும்வழக்கில் ஆஜராகி வழக்காடும் விவரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான் ஆனால் அதற்கு முன்பே மற்ற பரிவர்த்தனைகள் முடிந்துவிட்டது. ஒருதலைபட்ச உத்தரவு நீக்கரவுசெய்யப்பட்டதால் அதற்கு முன்பு ஒருதலைபட்ச தீர்ப்பின் அடிப்படையில் செய்யப்பட்ட பரிவார்த்தனைகள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல, நீதிமன்றதீர்ப்பிற்கு உட்பட்டது.

16. ஒருதலைபட்ச தீர்ப்பு நீக்கரவு செய்யப்பட்ட விவரத்தை நான் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தேனா என்றால் இல்லை அதற்கு முன்பே அனைத்து நடைமுறைகளும் முடிந்துவிட்டது. வழக்கில் அவர்கள் தற்போது வழக்காடுவதால் மேற்சொன்ன நடைமுகைள் மற்றும் பரிவரத்தனைகள் அவர்களை கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல.

17. கோவிலுக்கு சொந்தமான சொத்திற்கு தவறாக வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிகளின் நேரத்தையும் நீதிமன்ற நேரத்தையும் நான் தேவையில்லாமல் அலைக்கழக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கேவிலுக்குசொந்தமான சொத்தை ஏலத்திற்கு விடும்போது வழக்கு நிலுவையில் இருப்பதாக காட்டி அதனை தடுத்து கோவிலுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

18. நான் தாவா 10 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள சிவசங்கரை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்காதது எனது தீய எண்ணத்திற்கு எடுத்துகாட்டு என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது போல சிவசங்கரிடம் இருந்து பணம் வாங்கி 1 வது மற்றும் 2 வது பிரதிவாதிக்கு பணம் கொடுத்திருந்தால் அந்த நபரை இவ்வழக்கில் சேர்த்திருப்பேன் வேண்டும் என்றே அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம்

பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் பணம் கொடுத்ததற்கான ஆவணம் எதுவும இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

19. நான் கோவில் சொத்தை கையகபடுத்தி பிரதிவாதிகளுக்கு தொந்தரவு செய்து எந்த ஒரு ஆதாரமும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கோவிலுக்குசொந்தமான நிலத்தை கோவில் யாருக்கு வேண்டும் ஆனாலும் வாடகைக்கு விடலாம் அதனை நான் தடுப்பதற்கு எந்த சட்டபூர்வ முகாந்தரமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன காரணத்திற்காக இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் பிரதிவாதிகள் 2,4 தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.